மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சை பெரிய கோயிலுக்கு எதிரில் கடைகள் கட்ட கோயில் நிலம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலுக்குச் சொந்தமான இடத்திலே சுற்றுலாத் துறை மூலமாக அங்கே கடைகளைக் கட்டுவதற்கு, வெளிநாட்டு, உள் நாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கே அதிகமாக வருவதால், அது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை நகராட்சியோ, அல்லது மற்ற வேறு அரசுத் துறையோ தான் கட்டவேண்டும். இது நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ரோடு ஓரங்களிலுள்ள இடம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று, கட்ட வேண்டும்.

புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம்.

209—(*வினா எண் 9792) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்போது செயல்படும்?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மின்னளவிகளின் வாங்கிய செலவை திரும்பிப் பெறும் முறை.

210—(*வினா எண் 10562) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது 'மீட்டர்கள்' இருப்பு இல்லை என்ற காரணத்தால் வாடிக்கையாளர்